செ.வெ.எண் :25/மார்ச் நாள்:18.03.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சிறப்பாக செயல்பட்ட 33 பொது இ-சேவை மையங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டு.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற 2019-2020-ஆம் ஆண்டிற்கான மின் ஆளுமை சங்க பொதுக்குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட பொது இ-சேவை மையங்கள் மற்றும் கணினி தரவு உள்ளீட்டாளர்களுக்கு (Computer Operators) கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

தமிழ்நாடு அரசு மக்கள் நலனுக்காக செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை பொதுமக்கள் சிரமமின்றி பெற்று பயனடைய ஏதுவாக மின்னாளுமை திட்டத்தின் கீழ் பொது இ-சேவை மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சேவை மையங்கள் மூலமாக பொதுமக்கள் பல்வேறு அரசு திட்டங்களுக்கு இணையம் வாயிலாக சிரமமின்றி விண்ணப்பித்து பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் மொத்தம் 391 பொது இ-சேவை மையங்கள்செயல்பட்டு வருகின்றன. அந்தவகையில், 2019-2020-ஆம் ஆண்டிற்கான மின் ஆளுமை சங்க பொதுக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட 33 பொது இ-சேவை மையங்கள் மற்றும் கணினி தரவு உள்ளீட்டார்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இக்கூட்டத்தில், கொரோனா வைரஸ் பராவமல் தடுப்பதற்கான நடைமுறைகள் குறித்து மருத்துவர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இவ்விழிப்புணர்வு அறிவிப்புகளை அனைத்து பொது இ-சேவை மையங்களிலும் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு.கோ.குருநாதன், இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு, மாவட்ட மின்னாளுமை மேலாளர் திரு.கா.பிரியதர்ஷன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**